**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**M.C.O.P 598 OF 2022**
**Deposition of Witness for : PW.2**

| | |
|---|---|
| Name | : குணசேகரன் |
| Husband's Name | : பச்சைமுத்து |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.12.2023

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஏழுமலையின் நண்பர் என்றால் இல்லை. அவர்எனக்கு எப்படி பழக்கம் என்று கேட்டார் கரும்பு வெட்டும் தொழில் மூலம் பழக்கம். நாங்கள் இருவரும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் ஆகும். 1 முதல் 3 மனுதாரர்களும் 4,5 மனுதாரர்களும் தனித்னியாக வசித்துவருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஒன்றாகதான் வசிக்கிறார்கள். மாலா, உஷா ஏழுமலையின் சகோதரிகள் என்றும் அவர்களுக்கு திருமணமாகி கணவருடன் தனித்தனியே வசிக்கிறார்கள். ஏழுமலைக்கு நிலம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு 60 சென்ட் இடம் உள்ளது. அது கிரையம் வாங்கப்பட்ட சொத்து ஆகும். அதை தவிர அவருக்கு சொத்து எதும் இல்லை. குத்தகை மூலமாக நிலம் எடுத்து அனுபவித்து வந்தார். ஏழுமலை மற்றும் கேசவன் ஆகியோர்களின் நிலத்தை குத்தகைக்கு எடுத்து பயிர் செய்தார். எனது ஊர் வானாபுரத்திற்கு தென்மேற்கில் உள்ளது. அங்கிருந்து குங்கிலிநத்தம் வந்து தான் வானாபுரம் வரவேண்டும் என்றால் சரிதான். வானாபுரம் கிராமத்திற்கு நேர் கிழக்கே தான் அத்திப்பாடி உள்ளது என்றால் சரிதான். வானாபுரத்திலிருந்து கிழக்கு நோக்கி சென்று பிறகு தெற்கு நோக்கி சென்றால் எதிர் மனுதாரரின் ஊரான பேராயம்பட்டு கிராமம் உள்ளது என்றால் சரிதான். விபத்து தீபாவளிக்கு மறுநாள் நடந்தது என்றால் சரிதான். இந்த விபத்து காலையில் 9 மணிக்கு ஏற்பட்டது என்றால் சரிதான். நானும்

ஏழுமலையும் அத்திப்பாடியில் உள்ள டாஸ்மாக்கில் திருட்டு மது வாங்கி அருந்திவிட்டு வானாபுரம் நோக்கி இருசக்கர வாகனத்தில் ஏழுமலை ஓட்ட நான் பின்னாடி உட்கார்ந்து வந்தேன் என்றால் பின்னால் உட்கார்ந்து வந்தது உண்மை தான் ஆனால் மது அருந்தி வரவில்லை. ஏழுமலைக்கு குடிப்பழக்கம் கிடையாது. போதையின் தாக்கத்தில் ஏழுமலை எதிர் மனுதாரரின் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மணிரத்தினம் விபத்து நடந்த இடத்திலேயே மயக்கம் ஆகிவிட்டாரா என்றால் இல்லை. எனக்கு எந்த காயமும் இல்லை. ஏழுமலைக்கு தலையில் அடிபட்டு மூக்கு, வாயில் ரத்தம் வந்தது. அப்போது நேரம் காலை 9 மணி இருக்கும். அந்த வழியாக வந்த டாடா ஏசியில் ஏழுமலை, என்னையும், மணிரத்தினத்தையும் மொத்தமாக ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மருத்துவமனையில் சேர்த்த பிறகு 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து எதிர் மனுதாரரை திருவண்ணாமலை G.H. அழைத்து சென்றார்கள். ஏழுமலையும் திருவண்ணாமலை G.H. க்கு அழைத்து சென்றார்கள். ஏழுமலையை மதியம் 12 மணிக்கு அழைத்து சென்றார்கள். அதுவரை ஏழுமலை வானாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்தார். அங்கு ஏழுமலைக்கு ஊசி போட்டு மருந்து மாத்திரை கொடுத்தார்கள். மருத்துவர்களும் அவரை பார்த்தார்கள். நானும் ஏழுமலையும் தான் மணிரத்தினத்தை செந்தில் குமாரின் டாடா ஏசியில் ஏற்றிக்கொண்டு வானாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்த்தோம் என்றும் ஏழுமலைக்கு நான் சொல்வது போல் காதில் மூக்கில் ரத்தம் வரவில்லை என்றால் சரியல்ல. நானும் ஏழுமலையும் சேர்ந்து தான் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து மணிரத்தினத்தை அனுப்பினோம் என்றால் இல்லை. இந்த விபத்தானது ஏழுமலை குடிபோதையில் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றதால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னுடன் ஏழுமலை வந்ததால் அவர் இறப்பிற்கு பஞ்சாயத்து செய்து என்னிடமிருந்து ரூ.5லட்சம் ஏழுமலை குடும்பத்திற்கு பஞ்சாயத்தார் வாங்கி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. ஏழுமலை எனது கிராமத்தை சேர்ந்ததால் என்பதாலும் என்னை மிரட்டி சாட்சியம் அளிக்க மனுதாரர் தரப்பில் அழைத்து வந்துள்ளார்கள் என்றும் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**/உண்மை நகல்/**

ஒப்பம்/–P.மதுசூதனன்,

**முதன்மை மாவட்ட நீதிபதி,**

**திருவண்ணாமலை.**